**கவனிக்க.-** *04.04.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1764 - 2012 ජුනි මස 22 වැනි සිකුරාදා - 2012.06.22

*1764 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*


*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 992 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 992 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2012, யூன் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, யூன் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கட்டுநாயக்க-சீதுவை நகர சபை

நகர சபை அதிகார பிரதேசத்திற்குள் நுளம்புகள் மற்றும் நோய் பரப்பும் பூச்சிகளை அளிப்பது பற்றிய துணைவிதிகள்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (தொடர் ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (குறைநிரப்பு துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் உள்ளூராட்சி நிறுவனங்கள் விடயப் பொறுப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களினால் வழங்கப்பட்டு, 2011, யூலை 5 ஆந் திகதிய 1713/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட துணைவிதிகள் கட்டுநாயக்க சீதுவை நகர சபையினால் ஏற்றுக்கொண்டு அமுல்படுத்த தகுந்ததென 2011, பெப்புருவரி 28 ஆந் திகதியன்று நடைபெற்ற நகர சபை மாதாந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகின்றேன்.

லலன்த குணசேக்கர,
தலைவர்,
கட்டுநாயக்க-சீதுவ நகர சபை.

கட்டுநாயக்க-சீதுவை நகர சபை,
சீதுவை,
2011.12.23.

6-666/1

---

### கட்டுநாயக்க-சீதுவை நகர சபை

நகர சபை அதிகார பிரதேசத்திற்குள் கன கழிவு முகாமைத்துவம் பற்றிய துணைவிதிகள்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடர் நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (குறைநிரப்பு துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் உள்ளூராட்சி நிறுவனங்கள் விடயப் பொறுப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களினால் வழங்கப்பட்டு, 2011, யூலை 5 ஆந் திகதிய 1713/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட துணைவிதிகள் கட்டுநாயக்க சீதுவை நகர சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுல்படுத்த தகுந்ததென 2011, திசெம்பர் 23 ஆந் திகதியன்று நடைபெற்ற நகர சபை மாதாந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகின்றேன்.

லலன்த குணசேக்கர,
தலைவர்,
கட்டுநாயக்க-சீதுவ நகர சபை.

கட்டுநாயக்க-சீதுவை நகர சபை,
சீதுவை,
2011.12.23.

6-666/2

---

### சிறீ ஜயவர்தனபுர மாநகர சபை

இலங்கை சட்ட விதிகளின் 252 ஆவது அத்தியாயத்தின் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 37(1) ஆம் பிரிவின்கீழ் கூறப்பட்டுள்ள அறிவித்தல்.

இலங்கை சட்ட விதிகளின் 252 ஆவது அத்தியாயத்தின் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 37(1) பிரிவின் பிரகாரம் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் சிறீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையினால் இல. 1565, 2008.08.29 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 1503 ஆவது பக்கத்தின் இல. 07 இன் கீழ், திருத்தப்பட்ட இல. 1626, 2009.10.30 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 1722 ஆவது பக்கத்தின் இல. 07 இன் கீழ் கீழே காணப்படும் முச்சந்தி சிறீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்கு உரித்தானது என தெரிவிக்கப்பட்ட அறிவித்தல் ரத்துச்செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கிறேன்.

சாந்த பி. லியனகே,
நகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை,
2012.6.8.

| குறி. இல. | வீதியின் பெயர் | எல்லை தொடக்கம் வரை | நீளம் அடி | அகலம் அடி |
|---|---|---|---|---|
| 01 | ஒபேசேகரபுர அபினவாராம இல. 29 இன் கிளை வீதி | வரிப்பண இல. 29 29/5 வரை | 219 | |

6-865

---

# நானாவித அறிவித்தல்கள்

### பலப்பிட்டிய பிரதேச சபை

அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான செய்முறைக் கட்டணங்கள், மேவுதல் அங்கீகாரத்திற்கான கட்டணங்கள் மற்றும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான சேவை இறுப்பனவுகள்

பலப்பிட்டிய பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் காணிகள் பகிர்ந்தளித்தல் மீது அறவிடப்படும் செய்முறைக் கட்டணங்கள் மேவுதல் அங்கீகாரத்திற்கான கட்டணங்கள், மற்றும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான சேவைக் கட்டணங்கள் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்ட அதிகார பிரதேசங்களுக்குட்பட்ட

பிரதேசங்களிலும் நகர அபிவிருத்திச் சட்டத்தின் செயற்பாட்டுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும் பொதுவாக ஏற்றவாறு 2012.04.01 ஆந் திகதி முதல் கீழே திருத்தப்பட்ட அட்டவணையின் படி கட்டணம் அறவிடுவதற்கு 2012.02.21 ஆந் திகதி பலப்பிட்டிய பிரதேச சபை மாதாந்த சபைக் கூட்டத்தின் போது பிரேரணை அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகிறேன்.

ஏ. தயானந்த த சில்வா,
தலைவர்,
பலப்பிட்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பலப்பிட்டிய,
2012, மாச்சு மாதம் 12 ஆந் திகதி.

| ஈடுபாடுகொள்ளப்படவேண்டிய அபிவிருத்திச் செயற்பாட்டின் தன்மை | பயன்படுத்த வேண்டிய படிவம் | கட்டணங்கள் |
|---|---|---|
| | | செய்முறைக் கட்டணங்கள் |
| 1. அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்<br>(i) காணி உபபிரிவிடுகை அங்கீகாரம் | அ | (i) காணித்துண்டின் அளவு ஒவ்வொரு காணித்துண்டுக்குமான கட்டணங்கள் (வீதிவடிகால்களும் பொது காணித்துண்டங்களும் நீங்கலாக)<br><br>150-300 சதுர மீட்டருக்கிடையே 500<br>301-600 சதுர மீட்டருக்கிடையே 400<br>601-900 சதுர மீட்டருக்கிடையே 300<br>900 சதுர மீட்டருக்கிடையே 200 |
| (ii) கட்டிடங்களை நிறுவுவதற்காக/ஏலவேயுள்ள கட்டிடத்துடன் ஒரு பகுதியை சேர்த்தலுக்காக/அவற்றை மீள நிறுவுவதற்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | ஆ. | (ii) (see table below) |

| தளப்பு | வதிவிடம் ரூபா | வர்த்தக அல்லது வேறு பயன்கள் ரூபா |
|---|---|---|
| 45 க்கு குறைவாக | 500 | 1,000 |
| 45-90 | 1,500 | 2,000 |
| 91-180 | 2,500 | 3,000 |
| 181-270 | 3,500 | 4,000 |
| 271-450 | 4,500 | 6,000 |
| 451-675 | 5,500 | 8,000 |
| 676-900 | 6,500 | 10,000 |
| 901-1,225 | 7,500 | 12,000 |
| 1,225 க்கு மேலாக | 7,500 | 12,000 |
| | 1226 ச. மீற்றருக்கு விஞ்சுதலான ஒவ்வொரு ச. மீற்றருக்கும் ரூபா 1,000 | 1226 ச. மீற்றருக்கு விஞ்சுதலான ஒவ்வொரு ச. மீற்றருக்கும் ரூபா 1,000 |

(iii) எல்லைச் சுவர்களை/அணைச்சுவர்களை நிறுவதல்

| (iii) | வதிவிட (ஒரு நேர்கோட்டு மீற்றருக்கு) ரூபா | வர்த்தக மற்றும் வேறு (ஒரு நேர்க்கோட்டு மீற்றருக்கு) ரூபா |
|---|---|---|
| * கட்டிடக் கோட்டுக்கு வெளியே | 300 | 400 |
| * கட்டிட கோட்டினுள் | 500 | 600 |

(iv) தாழ்ந்த நிலங்களை நெற்காணிகளை மீட்டல் — (iv) 150 ச. மீற்றருக்கு குறைவான காணிக்கு ரூபா 1500 வும் விஞ்சுதலான ஒவ்வொரு 150 ச. மீற்றருக்கும் ரூபா 1000 வும்

| ஈடுபாடுகொள்ளப்படவேண்டிய அபிவிருத்திச் செயற்பாட்டின் தன்மை | பயன்படுத்த வேண்டிய படிவம் | கட்டணங்கள் |
|---|---|---|
| (v) தொலைத்தொடர்பு வானலை வாங்கிக் கோபுரங்களை நிறுவதல் | | (v) 5-20 மீற்றர்களுக்கிடையேயான கோபுர உயரத்துக்கு ரூபா 20,000<br>20 மீற்றருக்கும் விஞ்சுதலான ஒவ்வொரு 150 மீற்றருக்கும் ரூபா100 |
| (vi) விசேட கருத்திட்டங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | | (vi) 5 மில்லியன் ரூபாவான கருத்திட்ட ஆகுசெலவுக்காக ரூபா 5,000 விஞ்சுதலான ஒவ்வொரு மில்லியனுக்கும் ரூபா 100 வும் |
| 2. வதிவிடக் கூறுகளின் பயன்பாட்டை மாற்றுதல் | ஆ | செய்முறைக் கட்டணங்கள்<br>(i) தளப்பரப்பு (ச. மீ.) — ரூபா<br>45 க்கு குறைவாக — 500<br>45-90 — 1,000<br>91-180 — 1,250<br>181-270 — 1,500<br>271-450 — 1,750<br>451-675 — 2,000<br>676-900 — 2,250<br>900 க்கு மேலாக — 2,250<br>901 ச. மீற்றருக்கு விஞ்சுதலான ஒவ்வொரு 90 ச. மீற்றருக்கும் 5,000 |
| 3. பூர்வாங்க திட்டமிடல் அனுமதிகள் | | செய்முறைக் கட்டணங்கள் |
| (i) காணிகளின் உபபிரிவிடுகை | இ | (i) 1000 ச. மீற்றருக்கு குறைவான காணி — 2,000<br>(ii) 1001-5000 ச. மீற்றருக்கிடையே — 5,000<br>(iii) 5001-10000 ச. மீற்றருக்கிடையே — 10,000<br>(iv) 10001 ச. மீற்றருக்கு விஞ்சுதலான ஒவ்வொரு 1000 ச. மீற்றருக்கும் — 1,000 |
| (ii) கட்டிடங்களை/நிறுவுவதற்காக ஏலவேயுள்ள கட்டிடங்களுக்கான சேர்த்தலுக்காக/அவற்றை மீள நிறுவுதல் | இ | (i) வதிவிட ரூபா 2,000 — வர்த்தக மற்றும் வேறு ரூபா 5,000 |
| (iii) எல்லைச் சுவர்களை/ அணைச்சுவர்களை நிறுவுதல் | இ | (i) 1,500 — 3,000 |
| (iv) தாழ்ந்த நிலங்களை நெற்காணிகளை மீட்டல் | இ | * 150 ச. மீற்றருக்கு குறைவான காணிப்பரப்பு — 2,500<br>* 151 ச. மீற்றருக்கும் மற்றும்<br>* 300 ச. மீற்றருக்கும் இடையே — 5,000<br>* 301 ச. மீற்றருக்கு விஞ்சுதலான ஒவ்வொரு 150 ச. மீற்றருக்கும் — 3,000 |
| (v) தொலைத் தொடர்பு வானலை வாங்கிக் கோபுரங்களை நிறுவுதல் | | * 5-20 மீற்றருக்கிடையேயான — 20,000<br>* 20 மீற்றருக்கு விஞ்சுதலான 01 மீற்றர் ஒவ்வொன்றுக்கும் — 10,000 |
| (vi) விசேட அபிருத்திக் கருத்திட்டங்கள் | இ | * சிறிய அளவிலான கருத்திட்டங்கள் 5 மில்லியன் ரூபாவுக்கு குறைவாக — 10,000 |

| | ஈடுபாடுகொள்ளப்படவேண்டிய அபிவிருத்திச் செயற்பாட்டின் தன்மை | பயன்படுத்த வேண்டிய படிவம் | | கட்டணங்கள் | ரூபா |
|---|---|---|---|---|---|
| | | ஈ | * | நடுத்தர அளவிலான கருத்திட்டம் 5-50 மில்லியன் ரூபாவுக்கிடையே | 50,000 |
| | | | * | பாரிய அளவிலான கருத்திட்டங்கள் 50 மில்லியன் ரூபாவுக்கு மேலாக | 150,000 |
| 4. | இசைவுச் சான்றிதழின் வழங்குகைகள் (எல்லா அபிவிருத்திகளுக்கும் இசைவுச் சான்றிதழ் பெறப்பட வேண்டும்) | | | இசைவுச் சான்றிதழை வழங்குவதற்கான கட்டணங்கள் | |
| | (i) வதிவிட நிர்மாணம் | | (i) | 300 ச. மீற்றருக்கு குறைவான தளபரப்புக்கு 3,000 ரூபாவும் விஞ்சுதலான ஒவ்வொரு ச. மீற்றருக்கும் 10 ரூபாவும் | |
| | (ii) வர்த்தக மற்றும் வேறு நிர்மாணம் | | (ii) | 100 ச. மீற்றருக்கு 3,000 ரூபாவும் விஞ்சுதலான ஒவ்வொரு ச. மீற்றருக்கும் 20 ரூபாவும் | |
| | (iii) காணி உபபிரிவிடுகை | | (iii) | முதலாவது காணித்துண்டத்துக்கு 1,000 ரூபாவும் விஞ்சுதலான ஒவ்வொரு காணித்துண்டத்துக்கும் 500 ரூபாவும் | |
| | (iv) எல்லைச் சுவர்களை/அணைச்சுவர்களை நிறுவுதல் | | (iv) | ஒவ்வொரு 100 நேர்கோட்டு மீற்றருக்கும் 1000 ரூபாவும் விஞ்சுதலான ஒவ்வொரு நேர்கோட்டு மீற்றருக்கும் 10 ரூபாவும் | |
| | (v) தாழ்ந்த நிலங்களை நெற்காணிகளை மீட்டல் | | (v) | 150 ச. மீற்றருக்கு குறைவான காணிக்கு 3000 ரூபாவும் விஞ்சுதலான ஒவ்வொரு ச. மீற்றருக்கும் 20 ரூபாவும் | |
| | (vi) தொலைத் தொடர்புவானலை வாங்கிக் கோபுரங்கள் நிறுவுதல் | | (vi) | உயரத்தில் 5 மீற்றருக்கும் 20 மீற்றருக்கும் இடையேயான கோபுரங்களுக்கு 2000 ரூபாவும் விஞ்சுதலான ஒவ்வொரு மீற்றருக்கும் 100 ரூபாவும் | |
| | (vii) விசேட கருத்திட்டங்கள் | | (vii) | சிறிய அளவில் 5000<br>நடுத்தர அளவில் 10000<br>பாரிய அளவில் 20000 | |
| 5. | வாகன நிறுத்திடங்கள் (அமைவிடத்தினுள் ஏற்பாடு செய்யப்படாத (நுஅஅ ஒழுங்குவிதிகளின்படியா நிறுத்திடங்களுக்கான சேவை இறுப்பனவுகள் | ஈ | | சேவை இறுப்பனவுகள் | ரூபா |
| | (i) கொழும்பு மாநகர சபை | | * | பாரமற்ற வாகனங்களும் கார்களும் | 500,000 |
| | | | * | லொறிகள் | 1,000,000 |
| | | | * | கொள்கலன்களுட்பட பெரிய வாகனங்கள் | 2,500,000 |
| | (ii) ஏனைய மாநகர சபை | | * | எல்லா வாகனங்களும் | 500,000 |
| | (iii) நகர சபையும் பிரதேச சபையும் | | * | எல்லா வாகனங்களும் | 250,000 |

| | ஈடுபாடுகொள்ளப்படவேண்டிய அபிவிருத்திச் செயற்பாட்டின் தன்மை | பயன்படுத்த வேண்டிய படிவம் | கட்டணங்கள் ரூபா | |
|---|---|---|---|---|
| 6. | மேவுதல் அங்கீகாரங்கள் | | மேவுதல் அங்கீகாரங்களை வழங்குவதற்கான கட்டணங்கள் | |
| (i) | அவசியமான அங்கீகாரத்தை பெறாமல் காணிகளின் உப பிரிவிடுகை | | (i) ஒவ்வொரு காணித்துண்டத்துக்கும் ரூபா 750 | |
| (ii) | அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களை பெறாமல் கட்டிடங்களை நிறுவுதல்/ஒருபகுதியைச் சேர்த்தல் அவற்றை மீள நிறுவுதல் | | (ii) வதிவிட ஒரு சதுர மீற்றருக்கு ரூபா | வர்த்தக மற்றும் வேறு ஒரு ச. மீற்றருக்கு ரூபா |
| | நிர்மாணக் கட்டம் | | 200 | 500 |
| | * அத்திவார வேலை மட்டும் பூர்த்தி செய்யப்பட்டது (தூண்பீட மட்டம் வரை) | | | |
| | * கூரை மட்டம் வரையிலான நிர்மானம் (கூரை நீங்கலாக) | | 300 | 1,000 |
| | * கூரை உட்பட்ட நிர்மாணம் | | 400 | 1,500 |
| | நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்டது | | 500 | 2,000 |
| (iii) | எல்லைச் சுவர்களை/அணைச்சுவர்களை நிறுவுதல் | | 400 | 400 |
| (iv) | தாழ்ந்த நிலங்களை நெற்காணிகளை மீட்டல் | | ஒவ்வொரு 150 ச. மீற்றருக்கும் | 5,000 |
| (v) | தொலைத் தொடர்புவானலை வாங்கிக் கோபுரங்கள் நிறுவுதல் | | உயரத்தில் ஒவ்வொரு 5 மீற்றருக்கும் | 10,000 |
| (vi) | விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | | ஒவ்வொரு 5 மில்லியன் ரூபாவான கருத்திட்ட ஆகுசெலவுக்கு | 10,000 |
| (vii) | இசைவுச் சான்றிதழைப் பெறாமல் குடியிருத்தல்/பயன்படுத்தல் | | நாளொன்றுக்கு | 5,000 |

7. வதிவிடக் கூறின் ஏனைய அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகளுக்கான பயன்பாட்டு மாற்றத்துக்கான இறுப்பனவு

(i) ஆதனமானது விசேட முதன்மை வதிவிட வலயத்தில் அமைந்திருப்பின் வதிவிடக் கூறொன்றை வேறேதேனும் அனுமதிக்கப்பட்ட பயன்பாட்டுக்கு மாற்றுவதற்கு ஒரு ச. மீற்றருக்கு ரூபா 2000.

(ii) ஆதனமானது விசேட முதன்மை வதிவிட வலயம் தவிர்ந்த ஏதேனும் வலயத்தில் அமைந்திருப்பின் வதிவிடக் கூறொன்றை வேறேதேனும் அனுமதிக்கப்பட்ட பயன்பாட்டுக்கு மாற்றுவதற்கு ஒரு ச. மீற்றருக்கு ரூபா 800.

விதித்துரைக்கப்பட்ட தளப்பரப்பு விகிதத்துக்கு விஞ்சுதலாக அனுமதிக்கப்பட்ட மேலதிகமான தளப்பரப்பு கட்டிடத்தின் நிர்மான ஆகுசெலவின் நூற்று வீதமொன்றாகக் கணக்கிடப்பட வேண்டிய சேவை இறுப்பனவுகள் பின்வரும் காரணிகளின் அடிப்படையின் மீது 40% இலிருந்து 10% வரை வேறுபடும்.

i. கட்டிடத்தின் அமைவிடம்.
ii. கிடைக்கக்கூடிய பொது வாழ்வசதிகளின் நிலைமை
iii. அபிவிருத்தியின் வகை
iv. சூழல் விளைவுகள்
v. அபிவிருத்தித் திட்டம் ஏதேனுமிருப்பின் அதன்படி வலயமைத்தல்

இக் கணக்கிடுதலுக்கு கவனத்துட்கொள்ளப்படும் கட்டிட ஆகுசெலவுகள் பின்வரும் பெறுமதிகளுக்கும் குறைவாகவிருத்தலாகாது.

| | | | |
|---|---|---|---|
| (i) | வதிவிட வீடுகள் | ஒரு ச. மீற்றருக்கு | 20,000 |
| (ii) | 4 மாடிகள் வரையிலான வதிவிடத் தொடர்மாடி வீடுகள், வர்த்தக மற்றும் அலுவலகக் கட்டிடங்கள் | ஒரு ச. மீற்றருக்கு | 30,000 |
| (iii) | 4 மாடிகளுக்கு மேலான வதிவிடத் தொடர்மாடி வீடுகள், வர்த்தக மற்றும் அலுவலகக் கட்டிடங்கள் | ஒரு ச. மீற்றருக்கு | 60,000 |
| (iv) | பாரமற்ற கைத்தொழிற் கட்டிடங்கள் | ஒரு ச. மீற்றருக்கு | 45,000 |
| (v) | பண்டகசாலைகள் | | 30,000 |

9. சேவைகளை அறிக்கைகளை அல்லது வேறு சேவைச் செயற்பாடுகளை வழங்குவதற்காக

(1) பூர்வாங்கத் திட்டமிடல் அனுமதிகள், அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள், இசைவுச் சான்றிதழ்கள் என்பவற்றை வழங்குவதற்கான போக்குவரத்து இறுப்பனவுகள் அபிவிருத்தியாளரினால் பொறுக்கப்படுதல் வேண்டும். இந்த ஆகக் குறைந்த இறுப்பனவுகள் இயைபான அலுவலகத்திலிருந்து உத்தேசிக்கப்பட்ட அமைவிடம் வரை ஒரு கிலோ மீற்றருக்கு 35 ரூபா என்ற அடிப்படையில் கணக்கிடப்படுதல் வேண்டும். இவ்வீதமானது நிலவுகின்ற எரிபொருள் ஆகுசெலவுகளின்படி மாற்றங்களுக்கு அமைந்ததாகும்.

(ii) விசேட ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் தளக்கோல வரைபடங்களைத் தயாரித்தல் மதிப்பீடுகளைத் தயாரித்தல் கருத்திட்டத் திட்டமிடுதல் என்பவற்றுக்காக கருத்திட்டத்தின் மதிப்பிட்ட ஆகு செலவின் ஆகக் குறைந்தது 10 சத வீதச் சேவை இறுப்பனவு அறவிடப்படுதல் வேண்டும்.

(iii) மேவுதல் அங்கீகாரங்களை வழங்குவதற்காக அறவிடப்பட்ட சேவை இறுப்பனவு காணி உபபிரிவிடுகையில் 10 சதவீத திறந்தவெளித் தேவைப்பாட்டின் காணி இடப்பரப்பினது சந்தைப் பெறுமதி மற்றும் ஒழுங்கு விதிகளின்படி ஏற்பாடு செய்யப்படாத வாகன நிறுத்திட வசதிக்கு பதிலாக அறவிடப்பட்ட இறுப்பனவுகள் என்பன தனிவேறான வங்கிக் கணக்கொன்றில் வைப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன் இப்பணங்கள் திறந்தவெளிகளை அபிவிருத்தி செய்தல் வாகன நிறுத்திட வசதிகள் நடைபாதைகளுக்கான சீர்திருத்தங்கள் அல்லது பொது நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் என்பவற்றுக்கு மட்டுமே பயன்படுத்தவும்படலாம்.

6-778

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.